மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com

17.08.2022 புதன்கிழமை | supeedsam.com | supeedsam@gmail.com

# நிலைபேறான அபிவிருத்தி கூட்டுறவு சட்டகத்தில் ஐநா மற்றும் இலங்கை கையொப்பம்




ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி கூட்டுறவு சட்டகம் (UNSDCF) 2023 – 2027 ஆனது இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை ஐக்கிய நாடுகளால் இன்று (17) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள அனைத்து ஐநா முகவர் அமைப்புகளினதும் செயற்பாடுகளை வழிநடத்தும் சட்டகம் (UNSDCF) என்பதோடு, நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் ஒட்டுமொத்த நோக்கம் மற்றும் பங்களிப்பையும் இது ஒருங்கிணைக்கும். இக் கூட்டுறவு சட்டகமானது பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதனோடு இணைந்த கொவிட் 19 பாதிப்புகள் என்பவற்றிலிருந்து வேகமாக மீளெழுச்சி பெறுவதற்கான செயற்பாடுகளை து ரி த ப் ப டு த் து வ த ற் க ா க, பொருளாதாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான ஒத்துழைப்பு, சமூக சேவைகள், நியாயமான தொழில், சமூக ஒருங்கிணைவு, மற்றும் இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும்.

(UNSDCF) ஆனது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் ஐக்கிய நாடுகளின் சார்பில் ஐநாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் – ஹெம்டி ஆகியோரால் இணைந்து கையொப்பமிடப்பட்டது. இக் கூட்டுறவு சட்டகத்தில் இலங்கையிலுள்ள ஐநா முகவர் அமைப்புகள், நிதியங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் த லை வ ர் க ளு ம் கையொப்பமிட்டனர். நிதி

02

# புதனன்று இலங்கை திரும்பும் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எதிர்வரும் 24ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ரஷ்யாவின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். மிக் ஒப்பந்தம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் அவர் முன்னிலையாகியிருந்தார். வாக்குமூலம் வழங்கிய பின் அங்கிருந்து வெளியேறிய அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் புலம்பெயர்ந்தோர் காரியாலயம்



இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போரின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக இலங்கையில் புலம்பெயர்ந்தோர் காரியாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார். நாட்டை மீட்பதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களில் ஒன்றாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதேநேரம், தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை இந்த வார இறுதிக்குள் நீக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

02

# விடுமுறையின்றி டிசம்பர் வரை வாரம் 5 நாட்கள் பாடசாலை

டிசம்பர் மாத ஆரம்பம் வரையில் விடுமுறையின்றி வாராந்தம் 5 நாட்களும் பாடசாலையை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைக் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு முழுவதும் வாராந்தம் ஐந்து நாட்களும் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. பாடசாலைகளுக்கு போக்குவரத்து காரணங்களால் சமூகமளிக்க முடியாத நிலைமைகள் குறித்த முறைபாடுகள் எவையும் இதுவரையில் கிடைக்கவில்லை. அவ்வாறான நிலை ஏற்பட்டால் அது குறித்து போக்குவரத்து சபை உள்ளிட்ட தரப்புடன்

02

# சுகாதார திணைக்களத்தின் எச்சரிக்கை

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. சுகாதார திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 4 மாதங்களுடன் ஒப்பிடும் போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

# ஐவர் மரணம்

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இன்று உறுதிப்படுத்தியுள்ளார். அவர்களில் 30 முதல் 59 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட 4 பேரும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களில் மூன்று பெண்களும் ஒரு ஆணும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீன கப்பலை உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா

இலங்கைக்கு சீன கப்பல் சென்றுள்ளதால் உருவாகியுள்ள சூழ்நிலையை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர்சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். எங்கள் அயலில் என்ன நடந்தாலும் எங்கள் பாதுகாப்பு மீது தாக்கத்தை செலுத்தக்கூடிய என்ன சூழ்நிலை உருவானாலும் அது எங்களின் கரிசனைக்குரிய விடயம் என அவர் தெரிவித்துள்ளார். எங்கள் நலன்கள் மீது தாக்கத்தை செலுத்தக்கூடிய எந்த விடயத்தையும் நாங்கள் உன்னிப்பாக அவதானிக்கின்றோம் என எங்கள் பேச்சாளர் தெரிவித்திருந்தார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தாய்லாந்தில் தெரிவித்துள்ளார்.

# ஒரு மாதத்திற்கு வசிப்பதற்கு 12,444 ரூபா போதுமானது

இலங்கையில் தனிநபரொருவர், ஒரு மாதத்திற்கு வசிப்பதற்கு சராசரியாக 12,444 ரூபா போதுமானது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் மாதத்திற்கான அறிக்கையின்படி, தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்தபட்ச மாதச் செலவு (தேசிய ரீதியிலான மதிப்பீடு) 12,444 ரூபா என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கிறது.

# யூரியா உரம் வழங்குவதற்கான ஒன்லைன் பதிவு ஆரம்பம்

பெரும் போகத்தில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான ஆன்லைன் பதிவு தொடங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. **www.agrarian.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாக விவசாயிகள் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2022ஃ23 பருவத்தில் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார். நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட்ட அதே விலையில் அதாவது 50 கிலோ எடை கொண்ட யூரியா மூட்டை 10,000 ரூபாவுக்கு சோள விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# சில தினங்களில் உயர்தர பெறுபேறு

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை செயன்முறை பரீட்சை இந்த வாரத்துக்குள் நிறைவடையும். பரீட்சை பெறுபேறுகளை எப்போது வெளியிடுவது என்பது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இன்னும் சில தினங்களில் அறிவிப்பார் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

# ரணில்-பசில் நாளை முக்கிய பேச்சுவார்த்தை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் நாளை முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது . அக் கலந்துரையாடலில் பெரமுனவை சேர்ந்த 7 சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் ஆழமான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

# 2 மாதங்களின் பின்னர் சுப்பர் டீசல்

ஒரு லட்சம் மெற்றிக் டன் சுப்பர் டீசல் மற்றும் டீசலை ஏற்றிய கப்பல் ஒன்று இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சுப்பர் டீசல் கொண்டுவரப்படுகிறது. இதேவேளை, தேசிய எரிபொருள் அட்டை திட்டத்தின் கீழ், அரச வாகனங்களைப் பதிவு செய்வது குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் கஞ்சன விஜயசேகர தலைமையில் நடைபெற்றுள்ளது. இணையவழியில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், மாகாண செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## நிலைபேறான அபிவிருத்தி கூட்டுறவு சட்டகத்தில் ஐநா..

அமைச்சில் இடம்பெற்ற இக் கையொப்பமிடும் நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி. அருணி விஜேவர்தன மற்றும் அவரோடு ஐநா அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய பணிப்பாளர் டேவிட் மெக்லசலன் – காரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய திறைசேரி செயலாளரான மஹிந்த சிறிவர்தன, "அனைவருக்கும் பொதுவான முன்னுரிமைகளை சூழ சர்வதேச சமூகத்தைக் ஒன்றிணைக்கக்கூடிய பன்முகத் தீர்வுகளின் முக்கியத்துவத்தையே தற்போதைய உலகளாவிய சவால்கள் வெளிப்படுத்துகின்றன. இலங்கை மக்களின் நிலைபேறான மற்றும் உட்சேர்ப்பான அபிவிருத்தியை நோக்கி செயலாற்றுகையில் இலங்கை ஐக்கிய நாடுகளின் இந்த கூட்டுறவு சட்டகமானது முக்கிய அங்கமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் – ஹெம்டி, "இந்த கூட்டுறவு சட்டகமானது தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் ஐநா சாசனத்தின் கொள்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலை நிறுத்தப்பட்டுள்ளன. **UNSDCF**ஆனது ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள மற்றும் ஒன்றையொன்று வலுவூட்டுகின்ற நான்கு மூலோபாய முன்னுரிமைகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன்போது ஐநாவின் முறைமையானது இலங்கையை உருமாற்றுகின்ற மற்றும் துரிதமான ஒரு வளர்ச்சியை அடைவதற்காக தனது தேர்ச்சியை ஒருங்கிணைக்கும். இந்த மூலோபாய முன்னுரிமைகளில் உட்சேர்ப்பான நியாயமான மனிதவள அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வு, மீளெழக்கூடிய மற்றும் பசுமையான மீட்சி மற்றும் பகிரப்பட்ட சௌபாக்கியம் மற்றும் நிலைபேறான சுற்றுச்சூழலுக்கான வளர்ச்சி, சமூக ஒருங்கிணைவு மற்றும் உட்சேர்ப்பான ஆட்சி மற்றும் நீதி, மற்றும் பாலின

சமத்துவம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. நிச்சயமாக, எமது செயற்பாடுகள் பொருளாதார வீழ்ச்சி மற்றும் கொவிட் 19 பாதிப்பு என்பவற்றிலிருந்து மீட்சி பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் விதமான இணைந்த பங்களிப்பைக் கொண்டமைந்திருக்கும்" என்று கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஐநா முறைமையின் நிகழ்ச்சித்திட்டங்கள் மனித உரிமைகள், பாரபட்சமின்மை மற்றும் "எந்த ஒருவரும் புறந்தள்ளப்படவில்லை " என்பதனை உறுதி செய்தல் ஆகிய கொள்கையில் நிலைநிறுத்தப்படும் என்று தெரிவித்தார்.

"2023 – 2027 அபிவிருத்தி கூட்டுறவு சட்டகமானது இலங்கையின் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளைப் பிரதிபலிக்கின்ற அதேவேளை நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலை சாத்தியமாக்குவதற்காக ஐநாவின் நாட்டுக்கான அணியுடன் இணைந்து செயற்படுகின்றது. பொருளாதார மற்றும் சமூக விடயங்களில் மகத்தான மாற்றங்கள் நடைமுறைக்கு வந்த இலங்கையின் முக்கியமான ஒரு தருணத்தில் இது நிறைவுக்கு வந்தது. தனது அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயலாக்கத்துக்கான தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்புக்கு இந்த சட்டகமானது ஐநா முறைமையின் முக்கியமான ஒரு மாற்றமாக இருக்கும்" என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி அருணி விஜேவர்தன தெரிவித்தார்.

**UNSDCF** ஆனது, அதன் 5 வருட நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியில் அடிப்படை பாதீட்டு ஒதுக்கமான உத்தேசத் தொகை 60 மில்லியன் அமெரிக்க டொலர்களால் நிதியளிக்கப்படும். இது ஏனைய வழிமுறைகளால் கிடைக்கப்பெறும் கிட்டத்தட்ட 325 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமானதாகும். ஐக்கிய நாடுகள், இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களுடன் இணைந்து எந்த ஒருவரையும் புறந்தள்ளாத நிலைபேறான அபிவிருத்தி நிரலொன்றில் கவனம் செலுத்துகின்றது. கூட்டாகவும் தனது சிறப்பு முகவர் அமைப்புகள், நிதிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அலுவலகங்கள் ஊடாகவும் நிலைபேறான மற்றும் உள்ளீர்ப்பான பொருளாதார அபிவிருத்தியை எட்டுவதற்கும், இதன்போது தரமான சமூக சேவைகளுக்கு சமத்துவமான அணுகல், வலுவூட்டப்பட்ட மனித இயலுமைகள், மனித உரிமைகள் மற்றும் சமூக ஒட்டிணைவு என்பவற்றை கைக்கொள்வதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்க முயற்சிக்கிறது

## இலங்கையில் புலம்பெயர்ந்தோர் காரியாலயம்

நாடு தற்போது ஸ்திரமான நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஜ/லை 18ஆம் திகதி முதல், எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவசரகால சட்டம் ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு, மனித உரிமைகள் ஆர்வலர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டனர். எவ்வாறிருப்பினும், கடந்த மாதம் 27ஆம் திகதி அவசரகால சட்டம் நாடாளுமன்றில் 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறான பின்னணியில், கொழும்பில் உள்ள விருந்தகம் ஒன்றில் நேற்று நடைபெற்ற 'தொழில்சார் வல்லுநர் சங்கங்களின் மாநாடு – 2022' விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை இந்தவார இறுதிக்குள் நீக்கமுடியும் எனத் தெரிவித்துள்ளார். தற்போது, நாட்டைக் கட்டியெழுப்ப பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு தேவை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்துடனான பணிக்குழாம்மட்ட ஒப்பந்தம் இறுதிகட்டத்தை நெருங்கியுள்ளதாகவும், அந்த உடன்படிக்கை இலங்கைக்கு சிறந்த நம்பிக்கையைக் கொடுக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## விடுமுறையின்றி டிசம்பர் வரை..

கலந்துரையாடி அந்த பிரச்சினையைத் தீர்த்து, வாராந்தம் 5 நாட்களும் பாடசாலைகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கொவிட் பரவலுக்கு மத்தியில் பாடசாலைகளை நடத்திச் செல்வது குறித்த எச்சரிக்கை எதனையும் சுகாதார அமைச்சு இதுவரையில் முன்வைக்கவில்லை. அதற்கான வழிகாட்டிகள் மற்றும் அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வழங்கினால் அதன்படி பாடசாலைகள் செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

# நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள மன்னார் - புத்தளம் பாதை மீள் திறப்பு தொடர்பில், ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அதிகாரிகள் குழுவினர் விஜயம்



மன்னார் – புத்தளம் பாதை (எலுவன்குளம் ஊடாக) கடந்த பலவருடங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளத்திறந்து மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளை செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அண்மையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், ஜனாதிபதியினை சந்தித்த போது மேற்படி பாதையின் அவசியம் தொடர்பில் எடுத்துரைத்திருந்த நிலையில், இதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை (17) எலுவன்குளம் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வன்னாத்தவில்லு பிரதேச செயலாளர் மற்றும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். மேற்படி குழுவினர் கள நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டனர். இதன்போது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் இங்கு வருகை தந்திருந்ததுடன், குறித்த பாதை தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இன்றைய விஜயத்தின் போது, அதிகாரிகளினால் எலுவன்குளம் பாலத்தின் புனரமைப்பு தொடர்பிலான வரைபடம் தயார்படுத்த போதுமான அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மேற்படி பாலத்தில் இருந்து மறிச்சுக்கட்டி நோக்கி செல்லும் உட்பாதையில் சேதமடைந்துள்ள இரு பாலங்களை பார்வையிட அதிகாரிகள் குழுவினர் அங்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

மேற்படி பாதையானது பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்தமை. முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் திறந்துவைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டிருந்த நிலையில், அதன்பிற்பாடு கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசின் போது நிரந்தரமாக இப்பாதை மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் இதனை திறப்பதற்கான முன்னெடுப்புக்களை ரிஷாட் எம்.பி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

# உளவளத்துணை செயற்பாடும் உடல் ஆரோக்கியம் பேணலும் கருத்தரங்கு



**(எப்.முபாரக்)**

திருகோணமலை ஃகிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகளிர் மஹாவித்தியாலத்தின் உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் ,உளவளத்துணைசெயற்பாடுகள் மற்றும் நஞ்சற்ற விவசயாத்தின் மூலம் உடல் ஆரோக்கியம் பேணல் வழிகாட்டல் நிகழ்சிகள் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றன. பாடசாலை அதிபர் எம்.எஸ்.நசூர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை வழிகாட்டல் ஆலோசனை பிரிவின் பொறுப்பாளர் அ.வ.மு.கியாஸ் ஆசிரியர் நெறிப்படுத்தினார். இந்நிகழ்விற்கு வளவாளர்களாக கிண்ணியா பிரதேச செயலகத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ. பஹிமா பேகம்,உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ.எப்.சக்னா,விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் டீ.தானிஸ்,எம்.சில்மியா,ஏ. எம் முர்மிசா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விவசாயிகளுக்கு டீசல்



**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்கு தேவையான டீசல் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார். மாவட்ட செயலகத்தில் இன்று (17) மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தின் போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதனடிப்படையில் மாவட்டத்தில் மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறீபுர ஆகிய பிரிவுகளில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது. விவசாயிகளுக்கு அறுவடைக்கான டீசல் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 10 லீற்றர் என்றவாறு சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் கிரமமாக வழங்கப்பட்டு வருகின்றன. அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலின்படி பிரதேச செயலாளர்கள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் இச்செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றனர். அதேபோல் விதைப்பு நடவடிக்கள் பிந்தி ஆரம்பிக்கப்பட்ட பிரதேசங்களில் நெல் அறுவடை தற்போது தொடக்கம் செப்டம்பர் மாத நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் கூடுதலாக நடைபெறும் என்பதனால் அதற்கான எரிபொருளை கிரமமான முறையில் விவசாயிகளுக்கு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது விவசாய சங்க பிரதிநிதிகள் அரசாங்க அதபரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர். விவசாயிகள்பயிர்ச்செய்கைமேற்கொண்டகாலப்பகுதியை அடிப்படையாக கொண்டு அறுவடைக்கான டீசல் தேவைப்பாடு தொடர்பான பட்டியல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலிற்கேற்ப விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் செயற்பாடு பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயற்பாடு துரிதப்படுத்தப்பட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல் அறுவடைக்காக கொண்டுவரப்படும் டீசல் முற்றாக விவசாயகளுக்கே விநியோகிக்கப்படும். அது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மேற்பார்வை செய்யுமாறு இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார்.

மேலும் பெரும்போகத்தில் உழவு நடவடிக்கைக்கான டீசலை விவசாயிகளுக்கு வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதன்போது குறித்த பிரதிநிதிகள் அரசாங்க அதிபரிடம் வேண்டிக்கொண்டனர். உரிய விடயத்தை உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் விவசாயத்திற்கான உரத்தேவைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாப்பட்டன.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் அப்துல் ஜப்பார், மாவட்ட விவசாய பணிப்பாளர் எம். குகதாசன், தேச உர செயலகத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர் , விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளும், மெய்நிகரி ஊடாக பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# இருநூற்று இருபது இலட்சம் பேருமே அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகியுள்ளனர்

அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளது இந்நாட்டின் இருநூற்று இருபது இலட்சம் மக்களே எனவும், அவர்களை பழிவாங்கும் நடவடிக்கையில் இருந்து காப்பாற்றுவதையே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அரசியல் பழிவாங்கலுக்கு ஆளான அரச அதிகாரிகள் குழுவொன்றிற்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரமொன்று பிரதமர் அலுவலகத்தின் ஊடாக முன்வைக்கும் நடவடிக்கையில் மொட்டுக் கட்சி துரிதமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இத்தருணத்தில் அவ்வாறானதோர் செயலை மேற்கொள்ள ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று (17) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தன்னிச்சையான முடிவினால் உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்துள்ளதோடு, இன்றும் அவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் பிள்ளைகள் முறையான கல்வியை பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை மேம்படுத்துவதை விட்டுவிட்டு, இது போன்ற அரசியல் பழிவாங்கல்கள் என்ற போர்வையில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு சலுகைகள் வழங்கப்படுவதை தாம் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒரு செல்லாக் காசு



பாறுக் ஷிஹான்

காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஊக்குவிக்க படுகின்றனர்.இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு.காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள்.செல்லாக் காசான தமிழ் தேசிய கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம் என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார். அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் இன்று நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, அம்பாறை மாவட்டத்தில் இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியும் வரை தொடரவுள்ளது.138 பேரை அம்பாறை மாவட்டத்தில் இழந்து இருக்கின்றோம்.அது மட்டுமல்ல காணாமல் போனோரின் அலுவலகத்தினை நாங்களும் 8 மாவட்டத்தினை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் வேண்டாம் என்று உறுதியாக நிற்கின்றோம்.

இருந்தபோதிலும்தமிழ்தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலம் வேண்டும் என்று கூறுவதற்கு காரணம் என்ன?இன்று உறவுகளை இழந்து தவித்த 8 மாவட்டங்களை சேர்ந்த நாங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.அவர்கள் (தமிழ் தேசிய கூட்டமைப்பினர்) இச்செயலில் இறங்குவதானது எமக்கு மனவருத்தத்தை தருவதுடன் ஆத்திரமடைகின்றோம்.

அது மட்டுமல்ல இந்நாட்டில் இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கை பொறிமுறையில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் நாங்கள் இன்று அனைத்து உலக சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம்.அதற்கான காரணத்தையும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் கூறி இருக்கின்றோம். இந்த உள்ளக பொறிமுறை விசாரணையை ஏன் விரும்பவில்லை என்ற காரணத்தையும் அங்கு தெளிவாக கூறியுள்ளோம்.ஒன்றுமில்லாத காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் (ஓ.எம்.பி) ஒன்றினை எம்மிடையே திணிக்க இலங்கை அரசு பார்த்தது.ஒன்றுமே இல்லாத அலுவலகம் என்பதனால் நாங்கள் இன்று வெறுத்திருக்கின்றோம்.

இவ்வாறான அலுவலகங்களை எல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று ஊக்குவிப்பதற்கான காரணம் என்ன?இன்று அவர்களது கதிரைகளை தக்க வைத்து கொள்ளவா?அடுத்த தேர்தலுக்கு தங்களை தயார்படுத்தி கொள்வதற்கா?என்பது எங்களுக்கு கேள்வி குறியாகவே உள்ளது.ஆகவே எங்களது விடயத்தில் தயவு செய்து மூக்கை நுழைக்க வேண்டாம்.எங்களுக்கு விடுதலையை பெற்றுத்தர விரும்பி இருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் எங்களது உறவுகளுக்கான நீதி கிடைத்திருக்கும். ஆனால் நீங்கள் கதிரைகளுக்கு ஆசைப்பட்டு அரசுடன் சேரந்து உழைக்கின்றீர்கள்.

எதிர்வரும் 9 ஆம் மாதம் ஜெனிவா கூட்டத்தொடரில் எமக்கான நீதி கிடைக்கும் என நம்புகின்றேன்.இன்று அரசாங்கத்துடன் இணைந்து எங்களது காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஊக்குவிக்க படுகின்றனர்.இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு.காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள். செல்லாக் காசான தமிழ் தேசிய கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம். எனவே தான் கூட்டமைப்பினர் எதுவுமே செய்யாமல் ஏமாற்றுபவர்கள் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.என்றார்.

# விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல்




பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகர சபை எல்லையினுள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதையடுத்துஇ அனைத்து மாட்டிறைச்சி கடைகளிலும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும்நடவடிக்கை செவ்வாய்க்கிழமை(16) முதல் முன்னெடுக்கப்படுகின்றது. மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்பின் விசேட பணிப்பின் பேரில், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மறு அறிவித்தல் வரை குறித்த விலைப்பட்டியல் தொடர்ந்தும் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் உரிய கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டு, அதிகரித்த விலை விற்கப்படுமாயின் எவ்வித முன்னறிவித்தலுமின்றி குறித்த கடைகள் மாநகர சபையினால் இழுத்து மூடப்படும் எனவும் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதேவேளை, மாட்டிறைச்சிக் கடைகளில் டிஜிட்டல் தராசு பயன்படுத்துவதற்கு இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதுடன் எதிர்வரும் 01.09.2022 ஆம் திகதி முதல் டிஜிட்டல் தராசு பயன்படுத்தத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# சான்றிதழ் வழங்கி வைப்பு

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேராறு மேற்கு மகளிர் ஆடை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஆறு மாத கால தையல் பயிற்சி பாடநெறியை நிறைவு செய்த பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று (17) நிறுவனத்தின் தலைவி பாத்திமா /ஹஸைமா தலைமையில் இடம் பெற்றது. இதன் போது ஆறு மாத கால தையல் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தி செய்த நாற்பத்தேழு 47 பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. பெண்களின் சுயதொழில் நடவடிக்கைகளை விருத்தி செய்யும் நோக்கில் இவ்தையல் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச



செயலாளர் உபேக்ஷா குமாரி மற்றும் தையல் போதறாசிரியர்கள் மற்றும் பயனார்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

# சிறுபோக நெற் செய்கை அறுவடை விளைச்சல் குறைவு



ஹஸ்பர்

திருகோணமலை மாவட்டம் – தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ பகுதியில் சிறு போக வேளாண்மை அறுவடை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை செய்கையானது தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் பசளை கிருமி நாசினி கிடைத்தனால் அமோக விளைச்சல் ஏற்பட்டது. இச்சிறு போகத்தில் கிருமி நாசினி பசளை கிடைக்காததனால் விளைச்சல் குறைவாகவே கிடைத்தது. என்று விவசாயிகள் தெரிவிக்கின்றன. முன்னர் 40–50 பேக் ஒரு ஏக்கருக்கு கிடைத்தது. இப்ப பசலை கிருமிநாசினி இன்மையால் 10 –15 பேக்குகளே கிடைக்கின்றன. யூரியா பசலை இல்லாத காரணமே விளைச்சல் குறைவுக்கு காரணமாகும். எண்ணெய் பிரச்சினை அதாவது டீசல் இல்லாத காரணமாக நெல் அறுவடை செய்வதிலும் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. அடுத்த போகத்திலாவது பசளை கிரிமி நாசினிகளை தந்து உதவுமாறு வேண்டுகிறோம்

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பாராட்டிய தென்கிழக்கு பல்கலைக்கழகம்

பாறுக் ஷிஹான்

மிக நீண்ட காலமாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் இயங்க வைத்து தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தென்கிழக்கு பல்கலைக்கழகம் பாராட்டி வாழ்த்தி உள்ளது. தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் இதற்கான பாராட்டு மற்றும் வாழ்த்து செய்தியை சம்பிரதாயபூர்வமாக அமைச்சருக்கு அனுப்பி உள்ளார். இதில் இவர் குறிப்பிட்டு உள்ளவை வருமாறு, எமது நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்து உள்ள இக்கால கட்டத்தில் தாங்கள் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டு இருக்கின்றமையை நான் வரவேற்று வாழ்த்துகின்றேன்.

நாட்டு நலனை முன்னிறுத்தி தாங்கள் மேற்கொள்ளஉள்ளமகத்துவம்வய்ந்தஅனைத்துவேலை



திட்டங்களுக்கும் முன்கூட்டியே எனது வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அதே நேரம் கடந்த 05 வருடங்களுக்கும் மேலாக செயல் இழந்து காணப்பட்ட ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் செயற்பட வைத்து தருவதற்கு தாங்கள் மேற்கொண்டு இருக்கின்ற அனைத்து முயற்சிகளுக்காகவும் எமது கல்வி சமூகத்தின் சார்பாக தங்களை பெரிதும் வாழ்த்துகின்றோம்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை உருவாக்கி தந்த முன்னோடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ ின் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பின் நாமத்தை இத்துறைமுகத்துக்கு தாங்கள் முன்னின்று சூட்டி வைத்தமைக்காகவும் எமது வாழ்த்துக்கள். இப்பிராந்தியத்தில் உள்ள உயர் கல்வி ஸ்தாபனம் என்கிற வகையில் தங்களுடைய அபிவிருத்தி சிந்தனைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் வெற்றிக்கு எம்மால் முடிந்த அனைத்து விதமான ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்கு காத்திருக்கின்றோம்.

ஆகவே ஒலுவில் துறைமுகத்தை இன்னமும் அபிவிருத்தி செய்வதற்கு தங்களால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள நன்மை பயக்கின்ற அனைத்து முன்னெடுப்புகளுக்கும் எனது பூரண ஆதரவை வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளேன். தாங்கள் கோருகின்ற பட்சத்தில் கடற்றொழில் துறை தொடர்பான எமது நிபுணத்துவங்களை தங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் ஆயத்தமாகவே உள்ளேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலுப்பைக்கடவையில் கவனயீர்ப்பு

( வாஸ் கூஞ்ஞ)

தமிழ் மக்களின் உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும் நட்பு நாடான இந்தியாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்தும் முகமாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தமது சாத்வீகமாகன ஜனநாயகமான நூறுநாட்கள் செயல்முனைவை ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பித்ததைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் புதன்கிழமை (17.08.2022) 17 வது நாள் இலுப்பைக்கடவை பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு– கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோவின் ஏற்பாட்டில் நூறு (100) நாட்கள் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் இவ் செயல் திட்டமானது இலுப்பைக்கடவையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெற்றது. குறித்த இவ் நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ , மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள் , பெண்கள் அமைப்புகள் , சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள் , என பலரும் இவ் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இவ் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களுக்கு கௌரவமான அரசிய தீர்வை பெறவதற்கான தெளிவுபடுத்தல்கள் இடம்பெற்றதுடன் மற்றும் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்களும் பெறப்பட்டது. குறித்த இவ் நிகழ்வானது வடக்கு கிழக்கு மாகாணங்களில் எட்டு மாவட்டங்களிலும் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது



# ஆட்டோ விபத்தில் மூவர் படுகாயம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

முச்சக்கர வண்டி மின் கம்பத்தில் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் வைத்தே இந்த விபத்துச் சம்பவம் நேற்று (16) இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர் ஆட்டோவில் கல்முனைக்குச் சென்று திரும்பும் போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. ஆட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தில் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இவ் விபத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடுஇ மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸலாமா பௌன்டேஷனின் இரத்ததான முகாம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு ஸலாமா பௌன்டேஷனின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் 6 வது தடவையாக மேற்கொள்ளப்படும் இரத்ததான முகாம் இன்று 17.08.2022 திகதி புதன்கிழமை மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாயலில், பள்ளிவாயலின் தலைவர் எம்.எச்.எம். சியாம் தலைமையில் இடம்பெற்ற குறித்த இரத்ததான முகாமிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு குறித்த இரத்ததான முகாமினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

பள்ளிவாயலின் மௌழவி எச். எம்.நியாஸ் அவர்களின் ஹிராத் ஓதலுடன் ஆரம்பிக்கப்பட்ட இரத்ததான முகாமில் அதிதிகளின் விசேட உரைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து குருதிக்கொடையாளர்களினால் இரத்ததானம் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த இரத்ததான முகாமிற்கு ஆன்மீக அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ .வீ.கே.சிவபாலன் குருக்கள், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் அருட்தந்தையுமான
நவரெட்ணம் நவாஜி அடிகளாரும் கலந்து சிறிப்பித்ததுடன், விசேட அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் எம். பி.மதன்,
மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் எம். மதிவண்ணன், மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, எம்.வீ.எம்.பிறிதோஸ் நளினி, மாவட்ட ஊடக அதிகாரி வீ.ஜீவானந்தன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் செயலாளர் தியாகராஜா, பள்ளிவாயலின் செயலாளர்
அமீன் நளினி உள்ளிட்ட மேலும் பலர் கலந்து சிறப்பித்திருந்ததுடன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் தியாகராஜா தவனேசன் தலைமையிலான இரத்த வங்கியின் உத்தியோகத்தர் குழாம்
இரத்தக் கொடையாளர்களிடமிருந்து இரத்தத்தை சேகரிக்கும் பணியினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாயலில் கீழ் இயங்கிவருகின்ற ஸலாமா பௌன்டேஷனானது, கடந்த 2016 ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பில் சமூக சமயங்களுக்கிடையிலான ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக செயற்பட்டுவரும் ஒரு அமைப்பாக திகழ்ந்துவருவதுடன், இம்முறை 6 வது தடவையாக இந்த இரத்த தானப்பணியினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்புக்கு நிதி ஒதுக்கீடு



(றியாஸ் இஸ்மாயில்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "சௌபாக்கிய இல்லம் – 2022 " திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வருமானம் குறைந்த மிகக் கஷ்டமான தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒன்பது வீடுகள் முழுயளவு,பகுதியளவு மற்றும் திருத்தம் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அக்கரைப்பற்று பிரதேச செயல உதவிப்பிரதேச செயலாளர் திருமதி ஏ.கே. றொஷின்தாஜ் தலைமையில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு –02 மற்றும் ஆலிம் நகர் கிராமப்பிரிவுகளில் இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது வீடுகளில் முழுயளவில் 3 வீடுகளுக்கு தலா 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதியளவில் 3 வீடுகளுக்கு 2 இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும் திருத்தத்திற்காக 3 வீடுகளுக்கு 1இலட்சத்து 25ஆயிரம் ரூபாவும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "சௌபாக்கிய இல்லம் – 2022 " திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்சேய்க் ரீ.எம்.அன்சார், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்சேய்க் எம்.ஜே.எம்.நிஹ்மத்தல்லா,சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர்,சமுர்த்தி மேற்கு வங்கி முகாமையாளர் யூ.கே.எம்.நழிம்,சமுர்த்தி அபிவிருத்தி உதவியாளர் எம்.ஐ.சபாயுதீன்,கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ.முஹாஜிர்,பள்ளிக்குடியிருப்பு 02ம் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தர் கே.நஜிமுதீன் கலந்து கொண்டு வீட்டிற்கான அடிக்கல்லினை நட்டி வைத்தனர்.

தற்போது பொருளாதார கஷ்டம் உள்ள இக்கால கட்டத்தில் வாழ்க்கையை கொண்டு நடாத்துவதில் மிகக் கஷ்டத்திற்கு மத்தியில் வாழ்ந்து வரும் வருமானம் குறைந்த ஏழை மக்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் "சௌபாக்கிய இல்லம் – 2022 " திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.





சித்தரருள் சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 71 வது குருபூசை கடந்த வெள்ளிக்கிழமை காரைதீவு சித்தர் மடாலயத்தில் நடைபெற்ற போது.. **படங்கள் காரைதீவு சகா**

# அரக்கு பாம்பினால் நாடு சொல்லொண்ணா துயரத்தில் தவிக்கின்றது

**( வாஸ் கூஞ்ஞ)**

உலகம் , எமது நாடு அரக்கு பாம்புகளுக்குள் சிக்குண்டு சொல்லொண்ணா துயரத்தில் தவிக்கின்றது. இந்த அரக்கு பாம்பு அழிக்கப்பட வேண்டும் என நாம் மரிஅன்னையை நோக்கி வேண்டுவோம். அதேவேளையில் நாம் ஒவ்வொருவரும் அருள் நிறைந்தவர்களாக வாழ வேண்டும் என்று மரியன்னை எம்மை நோக்கி கேட்கின்றாள் என கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரனி றஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மருதமடு ஆலய பெருவிழா திங்கள் கிழமை (15.08.2022) கொண்டாடியபோது இதில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரனி றஞ்சித் ஆண்டகை தனது மறையுரையில், வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள மருதமடு அன்னையின் திருப்பதியில் வீற்றிருந்து அன்னையின் விழாவில் நாம் பங்குபற்றிக் கொண்டு இருக்கின்றோம்.

(15.08.2022) திங்கள் கிழமை திரு அவையானது மரியாளின் விண்ணேற்பு விழாவை நினைவு கூறுகின்றது. மரியாள் தொடர்பாக திருஅவையானது நான்கு கோட்பாடுகளை முன்வைத்து அவைகளை பகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது. மரியாள் இறைவனின் தாய் என்று 431 ஆம் ஆண்டு மரியாள் என்றும் கன்னியானவள் என்று 553 ஆம் ஆண்டும் மரியாள் அமல உற்பவியாக பிறந்தாள் என்று 1854 ஆம் ஆண்டும் பிரகடனம் செய்த திருஅவையானது இவ் மூன்று கோட்பாடுகளையும் அடித்தளமாக வைத்து மரியாள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள் என மிகவும் சுறுக்கமான வரையறையில் நான்காவது விசுவாச கோட்பாட்டை அதாவது மரியாளின் விண்யேற்பை



காத்திகை மாதம் முதலாம் நாள் 1950 ஆம் ஆண்டு அன்றைய பாப்பரசராக இருந்த 12 ஆம் பத்திநாதர் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டது.

திங்கள் கிழமை கொண்டாடப்படும் இவ் விழா எமது விசுவாசத்தின் விழாவாகும். இந்த விசுவாசத்தை இரண்டாம் வத்திக்கான சங்கம் இவ்வாறு கூறுகின்றது. உடலோடும் ஆன்மாவோடும் மாட்சிமைப் படுத்தப்பட்டுள்ள இயேசுவின் தாய் இவ்வுலகில் ஆண்டவர் வரும்வரை பயணம் செய்யும் இறை மக்களின் உறுதியான எதிர்நோக்குடனும் இருப்பதற்கு அடையாளமாக இருக்கின்றாள். பட்டத்தரசி இறைவனின் வலது பக்கத்தில் இருப்பது இந்த தாய்தான என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வலது புறத்தில் இருப்பது என்பது ஒருவருடைய கோட்பாடுகளை ஒருவருடைய விருப்பத்துக்கு அமைய வாழ்வது ஒரு பாக்கியம். இதனால்தான் நாம் கூறுவது இவர் இவருக்கு வலது கை என்று. மரியன்னை இறைவனின் வலது பக்கத்தில் நிற்பது மரியாள் தனது தாழ்மையை வெளிப்படுத்துகின்றாள். நாம் வாழ்கின்ற சமூதாயத்திலே நாம் அரக்கு பாம்புக்குள் சிக்குண்டவர்களாக வாழ்கின்றோம். அரக்கின் பாம்பின் ஆட்சியை நாம் கண்டு கொண்டு இருக்கின்றோம்.

இது உலக ரீதியாக இருக்கலாம் எமது நாடாக இருக்கலாம் எமது சமூதாயமாக இருக்கலாம் எமது குடும்பமாக இருக்கலாம் நாங்கள் தொழில் புரிகின்ற தொழில் நிறுவனமாக இருக்கலாம் இவற்றுக்குள் அரக்கு பாம்பின் கொடூரம் அரக்கின் பாம்பின் ஆட்சி நடந்து கொண்டு இருப்பதையும் அதேநேரத்தில் அரக்கின் பாம்பின் இடையில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடைபெறும் போராட்டங்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்தபோதும் இந்த அரக்கு பாம்பு தோற்கடிக்கப்படுகின்றது. மரியாள் இயேசுவை பெற்றெடுத்தாள் அவர் மனுக்குலத்தை மீட்டெடுக்கின்றார்.

மரியாள் அருள் நிறைந்தவளாக இருந்தாள் ஆண்டவர் அவளோடு இருந்தார். இதனால்தாள் அனைத்தையும் அவள் வெற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நாம் இந்த தாயிடம் வேண்டுவது இந்த அரக்கு பாம்பிடமிருந்து நாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வேண்டுவோம். இந்தநேரம் அன்னையானவள் எம்மிடம் கேட்பது நீங்களும் அருள் நிறைந்தவர்களாக வாழுங்கள் உங்களுடன் ஆண்டவரை வைத்துக் கொள்ளுங்கள் உங்களுடன் நீங்கள் ஆண்டவரை வைத்துக் கொள்ளவில்லை என்றால் நாளுக்கு நாள் அருள் நிறைந்து வாழ முற்படாவிட்டால் நீங்கள் அரக்கு பாம்புக்கு இரையாக வேண்டிய நிலை ஏற்படும். நாம் இந்த நேரத்தில் நாட்டில் நிலவுகின்ற சொல்லொண்ணா துன்பங்கள் மத்தியில் வாழ்கின்ற வேளையில் இந்த அரக்கு பாம்புகளை இறைவன் அழிக்க வேண்டும் என்று மன்றாடுவோம்.

# ஆங்கில அறிவை மேம்படுத்த கலந்துரையாடல்

**எப்.முபாரக்**

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட சலப்பையாறு பகுதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணி (யூத்கோப்ஸ்) நிறுவனத்தின் மூலம் குச்சவெளி பிரதேசத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் ஆங்கில அறிவினை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் குச்சவெளி இளைஞர் படையணியின் பொறுப்பதிகாரிக்கும்,குச்சவெளி பிரதேச தவிசாளருக்குமிடையில் இன்று(17) இடம்பெற்றது. குச்சவெளி பிரதேச சபையின் தலைமையகத்தில் தவிசாளர் ஏ.முபாறக் அவர்களின்தலைமையில் இடம்பெற்றது. இதன்போது குச்சவெளி தவிசாளரினால் பிரதேச சபைக்குட்பட்ட இளைஞர்,யுவதிகளின் நலன் கருதி அவர்களின் தொழிநுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவினை வளர்க்கும் முகமாக ஆங்கிலம், கணனி கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்ட குறித்த அதிகாரி இதற்கான ஏற்பாடாக மிகவிரைவில் நேர்முக தேர்வை நடாத்தி கணினி மற்றும் ஆங்கில பயிற்சிக்காக இளைஞர், யுவதிகளை தெரிவுசெய்வதாகவும் தவிசாளரிடம் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் படையணியின் செயற்பாடுகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் இதன் போது தெரிவித்தார்.

# வருடாந்த மடு மாதா திருவிழா சுவிஸ் நாட்டில்

**(வாஸ் கூஞ்ஞ)**

சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆண்மிகப் பணியகத்தினால் வருடா வருடம் கொண்டாடப்படும் மடு மாதா திருவிழா இந்த வருடமும் பொது திருவிழாவாக கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என சுவிஸ் ஆன்மிக பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டுகளில் கொரோணா வைரஸ் தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்களோடு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுத்து இறையாசீர் வழங்கப்பட்டது.

இவ்வருடம் இறைமக்களின் பேராதரவோடு மடு அன்னைக்கு விழா எடுக்கப்படவுள்ளது. இத்திருவிழாவானது இந்த மாதம் 20.08.2022 (சனிக்கிழமை) காலை 10:30 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றது. வருடா வருடம் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி பிற சமய மக்களும் இத் திருவிழாவில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீயை பெற்றுச்செல்லுவது வழமையாக காணப்படுகின்றது. எனவே இந்த வருடமும் இன மத மொழி கடந்து அன்னையின் இறையாசீரை பெற்றுக்கொள்ள இயக்குனர் மற்றும் அருட்பணி பேரவையினர் அழைத்து நிற்கின்றார்கள்.

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

# அறுவைக்காக வைக்கப்பட்டிருந்த திருட்டு மாடுகள் மீட்பு



**எஸ். சதீஸ்**

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் திருடப்பட்டு இறைச்சிக்காக கொண்டு சென்ற மாடுகள் செவ்வாய்கிழமை (16) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர். வவுணதீவு பிரதேசத்திலுள்ள சின்னகாலபோட்டமடு பகுதியில் மேச்சலுக்காக விடப்பட்டிருந்த இரண்டு பசு மாடுகளை அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருடி மாட்டு வியாபாரிக்கு குறைந்த விலைக்கு விற்றுள்ளார். இம்மாடுகளை காத்தான்குடி பகுதியில் அறுவைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் இரகசிய தகவலுக்கு அமைவாக பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுணதீவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் விக்கிரமசிங்கே தலையிலான பொலிஸாரின் நடவடிக்கையினால் மீட்கப்பட்ட மாடுகளுடன் சந்தேகத்தன் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மாடுகளையும் ஐந்து சந்தேக நபர்களையும் புதன்கிழமை (17) மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதா பொலிஸார் தெரிவித்தனர்.

# விரிவுரையாளர்கள் சமூக மாற்றங்களை வழிப்படுத்துவதில் முக்கியமானவர்கள்



**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

விரிவுரையாளர்கள் என்ற நோக்கில் மாத்திரமின்றி சமூக மாற்றங்களை வழிப்படுத்துபவர்கள், விசைப்படுத்துபவர்கள் என்ற முறையிலும் முக்கியமானவர்கள் என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் தெரிவித்தார். தென்கிழக்கு பல்கலைகழகத்தில் புதிதாக நியமனம் பெறும் விரிவுரையாளர்களை இன்னும் வினைத்திறன் மிக்கவர்களாக மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றது.

அந்த வரிசையில் ஐந்தாவது கட்டமாக 23 விரிவுரையாளர்கள் தங்களது பயிற்சி நெறியை அண்மையில் நிறைவு செய்திருந்தனர். இப்பயிற்சிப் நெறியினை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ. ஜௌபர் தலைமையில் இன்று (16) நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்: மேலும் அவர் உரையாற்றுகையில்: இலங்கை போன்ற நாடுகளில் விரிவுரையாளர்கள் பணி தொடர்பான, புதிய நோக்கமும் தேவையும் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மிகவும் பொறுமையாக விருத்தி செய்ய வேண்டிய சமூக பிரிவினராக விரிவுரையாளர்கள் காணப்படுகின்றனர்.

விரிவுரையாளர்கள் மிக விரிவான பாடத்திட்டங்களை தயாரித்து தொடர்ச்சியாக அவற்றை மீட்டு கொண்டிருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகங்களில் போதியளவு அறிவை வழங்குதல் போதுமானதன்று, அத்தகைய அறிவை நடைமுறை வாழ்வில் பிரயோகிப்பதற்கான தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சமூக இலக்குகள், சமூக தொழிற்பாடுகள், சமூக அசைவியக்கம், சமூக முன்னேற்றம் போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இயங்கியல் நடைமுறைகளில் மையச் சக்கரமாக தொழிற்படும் வினைத்திறனையும், விளைதிறனையும் தீர்மானிப்பவர்கள் விரிவுரையாளர்களே.

விரிவுரையாளர்கள் என்ற நோக்கில் மாத்திரமின்றி சமூக மாற்றங்களை வழிப்படுத்துபவர்கள், விசைப்படுத்துபவர்கள் என்ற முறையிலும் முக்கியமானவர்கள். பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் இயல்பாக உயரிய சமூகத் தொடர்புகளை பெறுவதால், உயரிய சமூக அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். பல்கலைக் கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான சமூக அந்தஸ்து ஒப்பீட்டு ரீதியில் உயர்வானது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணியாற்றுவதற்கான மொழியறிவு, விடய உள்ளடக்கம், கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் சமூக திறன்கள் என்பன போதுமானதாக இல்லை என்று உணரப்பட்டுள்ளது.

புத்துணர்ச்சி நோக்கும், தொடர்கல்வி ஊக்கமும், பன்மொழித் தேர்ச்சியும்இ தகவல் தொழில் நுட்ப தகைமையும், எங்கும் எப்போதும் பணியாற்றும் மனப்பாங்கும் கொண்டவர்களே விரிவுரையாளராக பணியாற்ற முடியும் என்ற புதிய எண்ணக்கரு வலுப்பெற்றுள்ளது. இவ்வாறு செய்யுமிடத்து விரிவுரையாளர்கள் மாறிவரும் வகிபங்கினை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும், சமூக பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற முடியும். இவை தொடர்பான ஆய்வுகளும் எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் பயிலுனர்கள் சார்பில் தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியல் பீட துறைத்தலைவராக கடைமையாற்றி ஓய்வுபெற்ற கலாநிதி யூ.எல்.பாரூக் உரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எம்.எச்.ஹாறுன், கலை கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் முஹமட் பாஸில், வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி ஏ.சபீனா ஹசன் மற்றும் பேராசிரியர்கள், சிரேஷ்ட பதிவாளர் அஹமட் அஸ்ஹர், பதில் கணக்காளர் மங்கள வன்னியராச்சி, பணிப்பாளர்கள், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்பாணத்திற்கு தேவையான முதற்கட்ட யூரியா உரங்கள் வந்தடைந்தன



**த.சுபேசன்**

யாழ் மாவட்டத்தில் 2022%23 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கைக்கான முதற்கட்ட யூரியா உரங்கள் 16%08 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. இவ்வாறு 4கொள்கலன்களில் வந்த 200தொன் யூரியா உரத்தினை பாராளுமன்ற உறுப்பினரும்–யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கையேற்று கோண்டாவில் உரக் களஞ்சியத்தில் வைத்து கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் கையளித்திருந்தார். இம்முறை யாழில் காலபோக நெற்செய்கைக்கு 1300தொன் யூரியா தேவைப்பாடாக உள்ள நிலையில் மிகுதி உரங்கள் விரைவில் கமநலசேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தொலைபேசி வாயிலாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை தொடர்பு கொண்டு யாழ் மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்ததுடன்–யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு மரக்கறி செய்கைக்கான உரங்களை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் அனுமதியில் மாற்றம் வேண்டும்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் தற்போதைய அனுமதி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்வி அமைச்சரை கோரியுள்ளது. இதில் மேலதிகமாக உள்வாங்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கல்வியலாளர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார். ஸ்ரீபாத கல்வியல் கல்லூரி மாணவர் அனுமதி தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவை சந்தித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் சப்ரகமுவ மாகாண பெருந்தோட்டத்துறை பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறைக்கேற்ப இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது. ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளை ஆசிரியர்களாக உருவாக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்தனர். அதனால் கல்லூரிக்கு உள்வாங்கப்பட்ட தமிழ்மொழி மூலமான 100 சதவீத மாணவர்களும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாகவே இருந்தனர். ஆனால் தற்போது பெருந்தோட்டத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்பவர்களின் தொகை ஒரு லட்சத்து 50 ஆயிரமாக குறைந்துள்ளது. மேலும் இத் தொகை குறைந்து கொண்டே செல்கின்றது. பெரும்பாலான தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு தொழில் துறைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் ஸ்ரீபாத கல்வியல் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் முப்பது வருட பழமை வாய்ந்த நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி இருக்கிறது. கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர் தோட்டத்தில் வேலை செய்பவர்களாகவும், அவர்கள் ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு செய்பவர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி மாற்றப்பட்டு அதற்கு பதிலாக ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி அனுமதியை கோரும் மாணவரின் ஒரு தலைமுறைக்கு முற்பட்டவர்கள் தோட்டத்தில் வேலை செய்பவர்களாக இருந்தால் அந்த மாணவர் அனுமதிக்கு தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும். அத்துடன் தோட்டப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றிருந்தால் அதுவும் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி அனுமதிக்கான மேலதிக தகுதியாக கொள்ளப்பட வேண்டும். எனவும் கோரப்பட்டுள்ளது. எனினும் இதற்கு மேலதிகமான திருத்தங்கள் மேற்கொள்ள மலையக கல்வியாளர்களின் கருத்துக்களையும் உள்வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரைவில் இது தொடர்பாக சந்திப்புகளையும் நடத்த தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெண்ணின் கழுத்திலிருந்த நகை அபகரிப்பு

**தலவாக்கலை பி.கேதீஸ்**

குடியிருப்புக்கு பின்னால் இருந்த சமயலறையில் வீட்டு வேலை செய்துக்கொண்டிருந்த பெண்ணொருவரின் கழுத்தில் அணிந்திருந்த 2.5 பவுண் தங்க சங்கிலியை அவர் முகத்தில் மிளகாய் பொடியை எறிந்துவிட்டு அதனை களவாடி சென்ற சம்பவம் ஒன்று தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் (17) நேற்று அதிகாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தனது குடியிருப்புக்கு பின்னால் இருந்த சமயலறையில் அதிகாலை 6 மணியளவில் குறித்த பெண் வேலை செய்துக்கொண்டிருந்தபோது அவர் முகத்தின் மீது மிளகாய் பொடியை தூவி விட்டு அவர் வாயை மூடி அவர் கழுத்தில் அணிந்திருந்த 2.5 பவுண் தங்க சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து பெண் கூச்சலிட அயலவர்களும் ஓடி வந்து திருடனை தேடியபோது அவன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான். இதனையடுத்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தலவாக்கலை பொலிஸார் குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டதோடு சந்தேக நபரை தேடும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டுள்ளனர்.

# காரைதீவு விவசாயிகளுக்கு யூறியா வழங்கலில் பாரபட்சமா?

**(காரைதீவு நிருபர் சகா)**

காரைதீவு கமநல பிரிவுக்குட்பட்ட 1442 ஏக்கர் காணிக்குரிய 636 விவசாயிகள் யூறியா கிடைக்கப்பெறாமல் திண்டாடுகின்றார்கள். காரைதீவின் நான்கு கண்டங்களைச்சேர்ந்த 636 விவசாயிகள் யூறியா வழங்கலில் புறக்கணிப்பு தொடர்பாக ஆர்ப்பாட்டம் நடாத்த திட்டமிட்டுவருகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை இடம்பெற்ற நிந்தவூர் மகாஓயா பல்லன்ஓயா போன்ற பிரதேசங்களுக்கு யூறியா வழங்கப்பட்டபோதிலும் அறுவடை இன்னும் 50வீதம் நடைபெறாமலுள்ள காரைதீவு போன்ற பகுதிகளுக்கு யூறியா மறுக்கப்படுவதேன் என விவசாயிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதேவேளை ,இப்போகத்தின்போது கள்ளச்சந்தையில் 40ஆயிரம் ருபாவுக்கு விற்கப்பட்ட யூறியாவைப் பயன்படுத்திய விவசாயிகளுக்கு விளைச்சல் வெகுவாக குறைந்துகாணப்பட்டது. ஏக்கருக்கு 20 விளைந்துள்ளது. அதற்கு காரணம் யூறியாவில் உப்பு கலக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதனை கண்டறியுமுகமாக கண்டியிலிருந்து விவசாயத்திணைக்கள ஆராய்ச்சி உயர்அதிகாரிகள் அம்பாறைக்கு வந்த ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை ,காரைதீவு கமநல சேவை நிலையத்தில் ஆக 4 ஊழியர்களே சிரமத்தின் மத்தியில் பணியாற்றுகின்றனர். இங்கு பணியாற்றிய 3உத்தியோகத்தர்கள் ஒரு மாதகாலத்திற்கென தற்காலிகமாக வேறு பிரதேசங்களுக்கென மாற்றப்பட்டபோதிலும் ஒரு வருடமாகியும்இன்னும்மீண்டும்அவர்கள் இங்கு நியமிக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அலுவலகத்தில் ஆளணித்தட்டுப்பாடு நிலவுகிறது. விவசாயிகளின் கருமங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் தமது கருமங்களை முடிக்கச்செல்லும் விவசாயிகள் நாட்கணக்கில் அலையவேண்டியுள்ளது. எனலே அம்பாறை மாவட்ட கமநல உதவி ஆணையாளர் இதுவிடயத்தில்தலையிட்டு குறித்த 3 உத்தியோகத்தர்களையும் மீண்டும் காரைதீவுக்கு மாற்றி வினைத்திறனுடனான சேவையை முன்னெடுக்கவேண்டும் என விவசாயிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.